செய்திி வெளியீடு எண்:374 நாள் : 12.07.2013

# செய்தி வெளியீடு

'ஓடி விளையாடு பாப்பா' என்றும், 'காலை எழுந்தவுடன் படிப்பு மாலை முழுவதும் விளையாட்டு' என விளையாட்டின் முக்கியத்துவத்தை மகாகவி பாரதியார் உணர்த்தியுள்ளார். ஒவ்வொருவருக்கும் படிப்பு மற்றும் விளையாட்டு ஆகிய இரண்டும் இரண்டு கண்களாகும். படிப்பு அறிவை வளர்க்கும். விளையாட்டு உடல் நலத்தைக் காக்கும். எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு கல்வி மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளின் கீழ் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில், விளையாட்டு வீரர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கும் வகையில் விளையாட்டு விடுதிகள் துவக்குதல், தினப் பயிற்சி திட்டத்தின் மூலம் வீரர்களுக்கு முழுமையான பயிற்சி அளித்தல், பன்னாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்வதற்காக பன்னாட்டுத் தரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், விளையாட்டு வீரர்கள் பன்னாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத் தொகை வழங்குதல், உள் விளையாட்டு அரங்கங்களை அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், அம்மாவட்ட மக்களிடையே பிரபலமாக விளங்கும் விளையாட்டினைத் தேர்ந்தெடுத்து, அந்த விளையாட்டினை ஊக்குவித்து, சிறந்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை உருவாக்க பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஹாக்கி விளையாட்டு மிகவும் பிரசித்திப்பெற்ற ஒன்றாகும். அம்மாவட்டத்திலுள்ள பெரும்பாலானோர் ஹாக்கி விளையாட்டை விரும்பி விளையாடி வருகிறார்கள். எனவே ஹாக்கி விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை இந்த மாவட்டத்தில் ஏற்படுத்துவதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறுவதற்கு தகுதித் திறன் வாய்ந்த ஹாக்கி வீரர்களை உருவாக்க முடியும்.

எனவே தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகரத்தில் 7 கோடி ரூபாய் செலவில் உலகத்தரம் வாய்ந்த செயற்கை இழை ஹாக்கி தளம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த தளத்தில் மழை நீர் வடிகால் கால்வாய்கள், மின்னொளி சாதனங்கள், ஹாக்கி தளத்தில் தொடர்ந்து தண்ணீர் தெளிக்கும் நீர் தெளிப்பான்கள் போன்ற வசதிகள் செய்து தரவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழகத்தில் இறகுபந்து (பேட்மின்டன்) விளையாட்டில் சிறந்த வீரர்கள், வீராங்கனைகள் உருவாக்கிட சென்னை, மதுரை, கடலூர், திருச்சி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் இறகுபந்து விளையாட்டுக் கழகம் (Badminton Academy) என்ற ஒரு அமைப்பினை உருவாக்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்தக் கழகத்தின் மூலம் இறகுபந்து விளையாட்டு பயிற்சி அளிப்பதற்கும், பல்வேறு போட்டிகளில் பங்கேற்பதற்கான செலவினங்கள், இறகுபந்து

விளையாட்டு சம்பந்தமான பயிற்சிகளை ஒளிப்பதிவு செய்து, அதனை அடிக்கடி திரையிட்டு பார்த்து தனது திறமையை வளர்த்துக் கொள்வதற்கான வசதியை ஏற்படுத்தவும், இந்த விளையாட்டுக்கான உபகரணங்கள் வாங்குதல் போன்றவற்றிற்காக ஒவ்வொரு கழகத்திற்கும் 14 லட்சம் ரூபாய் வீதம் 70 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்தக் கழகத்தில் மாதந்தோறும் 25 நாட்களுக்கு 15 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தொடர்ந்து 10 மாதத்திற்கு பயிற்சியளிக்கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவ, மாணவிகள் அதிக அளவில் விளையாட்டுகளில் பங்கேற்பதை ஊக்குவிப்பதற்காகவும், சிறந்த பயிற்சியினைப் பெற்றிடவும், மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்று, தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்காகவும், பல்கலைக்கழகங்களுக்கிடையே நடைபெறும் அகில இந்திய போட்டிகளில் தமிழக பல்கலைக்கழக அணிகள் வெற்றி பெற்றிட வழிவகை ஏற்படுத்தும் வகையிலும், மாநில அளவில் பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டிகள் நடத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் அடிப்படையில் ஆண்டுதோறும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களுக்கிடையே தடகளம், இறகு பந்து (Badminton), கூடைப்பந்து, கால் பந்து, ஹாக்கி, கபடி, டேபிள் டென்னிஸ், டென்னிஸ் மற்றும் கைப்பந்து போன்ற விளையாட்டுப் போட்டிகளை நடத்த 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த போட்டிகளில் முதல் பரிசு பெறும் 194 பேர்களுக்கு, தலா 10 ஆயிரம் ரூபாய், இரண்டாம் பரிசு பெறும் 194 பேர்களுக்கு தலா 7,500/– ரூபாய், மூன்றாம் பரிசு பெறும் 50 பேர்களுக்கு தலா 5,000/– ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்படும். இதே போன்று தமிழ்நாட்டிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்களுக்கிடையேயும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.

சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பயிற்றுநர்களின் பணியினை அங்கீகரிக்கும் வகையில், அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர மதிப்பூதியத்தை 8000 ரூபாயிலிருந்து 15000 ரூபாயாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக ஆண்டொன்றுக்கு கூடுதலாக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் தமிழகத்திலிருந்து அதிக அளவில் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேசிய மற்றும் உலக அரங்கில் நடைபெறும் போட்டிகளில் பங்கு கொள்ள வழிவகை ஏற்படும்.

******

வெளியீடு: இயக்குநர்,செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்: 12-7-2013